நக.எண். 001/2023

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - காட்பாடி ஊராட்சி ஒன்றியம் - தாராபடவேடு மதுரா, மெட்டுகுளம் ஊராட்சி, மெட்டுகுளம் கிராம சர்வே எண். 63/1B, 62/2A, 63/2B, 63/2C-ல் 1.84 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி அளிக்க உரிய அரசு தலைப்பில் கட்டணம் செலுத்த தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை:

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் வேலூர் அவர்களின் கடித எண். VLR/YYDONOON/080/2023, நாள். 29.08.2023

2. அரசாணை எண். G.O(Ms) No. 79 Housing & Urban Development (UD4(3) Department Dated: 04.05.2017.

****

காட்பாடி ஊராட்சி ஒன்றியம் தாராபடவேடு மதுரா, மெட்டுகுளம் ஊராட்சி / கிராமம் ச.எண். 63/1B, 63/2A, 63/2B, 63/2C-ல் 1.84 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அங்கீகாரம் அளித்து பார்வை 1-ல் காணும் கடிதப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மனைப்பிரிவிற்கு அனுமதி அளிக்க கீழ்காணும் விவரப்படி உரிய தலைப்பு கட்டணம் செலுத்த மனைப்பிரிவு உரிமையாருக்கு தெரிவிக்கப் படுகிறது.

வ.எண்.	கட்டணத்தின் தன்மை	பரப்பளவு ஏக்கர்	வழிகாட்டி மதிப்பு	வழிகாட்டி மதிப்பில் 3% தொகை	செலுத்த வேண்டிய தலைப்பு
1.	ஆய்வுக்கட்டணம்	ரூ. 2000/-			ஊராட்சி கணக்கு எண்.1
2.		1.84	ரூ.6,80,000/-	ரூ.37,556/-	DPC 0217-60-800-AS-22709

மேற்காணும் விவரப்படி வழிகாட்டி மதிப்பில் 3% தொகை ரூ.37,536/-ஐ உரிய அரசு தலைப்பிலும், ஆய்வுக்கட்டணம் ரூ.2000/-ஐ ஊராட்சி கணக்கு எண். 1-ல் செலுத்தி அதற்குண்டான ரசீதுகளை இவ்வலுவலத்தில் சமர்பித்த பின்னர் அனுமதி ஆணை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்
மெட்டுகுளம் ஊராட்சி
காட்பாடி ஒன்றியம். (வே.மா.)

பெறுநர்

திருமதி. P.சாவித்திரி,
திரு. P.பார்த்திபன்,
திருமதி. R.சித்ரா,
எண். 654/B பகுதி-II,
சத்துவாச்சாரி,
வேலூர்-632 009.

நகல்:

1. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ம.4)
ஊராட்சி ஒன்றியம், காட்பாடி.

நகல் பணிவு:

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
வேலூர்-9.
2. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊராமைப்பு அலுவலகம்,
கோட்டை சுற்றுசாலை பெரியார் பூங்கா எதிரில், வேலூர்-1.

காட்பாடி ஊராட்சி ஒன்றியம் மெட்டுகுளம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திருமதி. I.அனிதா இளங்கோ.

ந.க.எண். 001/2023 நாள். 29.09.2023

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - காட்பாடி ஊராட்சி ஒன்றியம் - தாராபடவேடு மதுரா, மெட்டுகுளம் ஊராட்சி கிராம சர்வே எண். 63/1B, 63/2A, 63/2B, 63/2C-ல் 1.84 ஏக்கர் பரப்பளவில் அடங்கியுள்ள மனை எண்கள். 1 முதல் 43 மனைகள் மற்றும் கடை எண். 1 மட்டும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் அளித்து உத்தரவிடல்-தொடர்பாக.

பார்வை:

1. நகர் ஊராமைப்பு இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் வேலூர் அவர்களின் கடித எண். VLR/YYDONOON/080/2023, நாள். 29.08.2023.
2. அரசாணை எண். G.O (Ms) No. 79 Housing & Urban Development (UD4(3) Departent Dated: 04.05.2017.
3. மெட்டுகுளம் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 001/2023, நாள். 29.09.2023.
4. நில வகைப்பாடு மாற்ற கட்டணத் தொகை 3% ரூ.37556/-, நாள்.
5. மெட்டுகுளம் கிராம ஊராட்சி பல்வகை இரசீது எண்: 3302, நாள். 29.09.2023
6. மெட்டுகுளம் ஊராட்சியின் தீர்மான எண். 377, நாள். 29.09.2023

உத்தரவு

காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தாராபடவேடு மதுரா, மெட்டுகுளம் கிராமம்/ஊராட்சி எண்கள். 63/1B, 63/2A, 63/2B, 63/2C-ல் 1.84 ஏக்கர் பரப்பளவில் அடங்கியுள்ள மனைப்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி அளித்து பார்வை 1-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 3-ல் காணும் கடிதத்தின்படி நில வகைப்பாட மாற்ற கட்டணத் தொகை ரூ.37,556/-ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டது.

பார்வை 5-ல் காணும் மெட்டுகுளம் ஊராட்சியில் ஆய்வுக்கட்டணம் ரூ.2000/- செலுத்தப்பட்டு அதற்கான இரசீது சமர்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 6-ல் கண்டுள்ளவாறு ஊராட்சியில் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தாராபடவேடு மதுரா, மெட்டுகுளம் ஊராட்சி/கிராம சர்வே எண். 63/1B, 63/2A, 63/2B, 63/2C-ல் அடங்கியுள்ள 1 முதல் 43 மனைகள் மற்றும் கடை எண். 1 மட்டும் (1.84 ஏக்கர்) நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

பெறுநர்

திருமதி. P.சாவித்திரி,
திரு. P.பார்த்திபன்,
திருமதி. R.சித்ரா,
எண். 654/B பகுதி-II,
சத்துவாச்சாரி,
வேலூர்-632009

தலைவர்
மெட்டுகுளம் ஊராட்சி
காட்பாடி ஒன்றியம், (வே.மா.)

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

1. நகர ஊரமைப்பு இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கோட்டை சுற்றுசாலை பெரியார் பூங்கா எதிரில், வேலூர்-1.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஊராட்சி ஒன்றியம், காட்பாடி.
3. சார்-பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், காட்பாடி.